


**07.01. 2025**

<u>தலைப்பு செய்திகள்</u>

1. பாரத்போல் இணையதளம் மூலம், இண்டர்போல் முகமையை இலகுவாக தொடர்பு கொண்டு தகவல்களை பெறமுடியும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா தெரிவித்துள்ளார்

2. நவீன தொழில் நுட்பங்கள் மூலம் உள்நாட்டு உற்பத்தி கட்டமைப்பு மேம்படுத்தப்பட வேண்டுமென்று விமானபடை தளபதி **Air Chief Marshal. A.P. Singh** வலியுறுத்தினார்.

3. **UGC Net** தேர்வுகள் தேதியை மாற்றியமைக்க கோரி முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின், மத்திய கல்வியமைச்சருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

4. தமிழகத்தில் **HMPV** நோய்த்தொற்று குறித்து மக்கள் அச்சப்பட தேவையில்லை என்று மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.

5. மலேஷிய ஓப்பன் பேட்மிட்டன் மகளிர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு இந்தியாவின் ட்ரீஷாஜாலி, காயத்ரி கோபிசந்த் இணை முன்னேறியது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖

<u>அமித்ஷா</u>

உளவுத்துறைக்கான பாரத்போல் இணையதளம் சர்வதேச புலனாய்வை புதிய அத்தியாயத்திற்குள் முன்னெடுத்துச் செல்லும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் மத்திய புலனாய்வு பிரிவின் பாரத்போல் இணையதள முகப்பை இன்று துவக்கி வைத்து பேசியஅவர், இதன்மூலம் இண்டர்போல் புலனாய்வு முகமைகள் தொடர்பு கொண்டு தேவையான தகவல்களை பெறமுடியும் என்றார்.

போதை பொருள், ஆயுதங்கள் கடத்தல், மனித கடத்தல், தீவிரவாதம் தொடர்பான குற்ற வழக்குகளை இலகுவாக கையாள இது பயனளிக்கும் என்றார்.

குடியரசு தலைவர் காவல் பதக்கங்கள் அறிவிக்கப்பட்ட 35 புலனாய்வு அதிகாரிகளுக்கு இவ்விருதுகளை அமைச்சர் வழங்கினார்.

❖❖❖❖❖❖❖

<u>சட்டமன்ற தேர்தல்</u>

டெல்லி சட்டமன்ற தேர்தல் அட்டவணையை இன்று பிற்பகல் தேர்தல் ஆணையம் அறிவிக்கின்றது.

தலைமை தேர்தல் ஆணையர் திரு. ராஜீவ்குமார், தேர்தல் தேதிகளை அறிவிக்கிறார்.

70 உறுப்பினர்களை கொண்ட டெல்லி சட்டப்பேரவையின் பதவிக்காலம் அடுத்தமாதம் 23-ம் தேதியுடன் முடிவடையவுள்ளது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖❖

**<u>A.P. சிங்</u>**

உள்நாட்டில் நவீன தொழில் நுட்பங்கள் உருவாக்கப்பட்டு உற்பத்தி திறன் கட்டமைப்பு மேம்படுத்தப்பட வேண்டுமென்று விமானபடை தளபதி **Air Chief Marshal. A.P. Singh** வலியுறுத்தினார்.

“வான்வெளியில் சுயசார்பு பாரதம்” என்ற தலைப்பிலான கருத்தரங்கை புதுதில்லியில் இன்று துவக்கி வைத்து உரையாற்றிய அவர், 2047-ம் ஆண்டு வளர்ச்சியடைந்த பாரத இலக்கை எட்ட, பாதுகாப்பு மற்றும் விமானப்படை பிரிவுகள் முக்கிய பங்கு வகிக்கும் என்றார்.

நவீன தொழில்நுட்பங்களுக்கான ஆராய்ச்சி மேம்பாடுகளில் அதிகவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும் அவர் எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖

<u>பிரதமர்</u>

பிரதமர் திரு. நரேந்திரமோடி ஆந்திர மாநிலம், விசாகபட்டினத்தில் 2 லட்சம் கோடி ரூபாய்க்கும் மேற்பட்ட புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுவதுடன் முடிவடைந்த திட்டங்களை நாளை, துவக்கி வைக்கிறார்.

தேசிய பசுமை ஹைட்ரஜன் இயக்கத்தின் கீழ் ஒருலட்சத்து 80 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டில் அமைக்கப்பட உள்ள நாட்டின் முதலாவது பசுமை ஹைட்ரஜன் மையம் 19 ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பிலான ரயில்வே சாலை மேம்பாட்டு திட்டங்களும் இதில் அடங்கும்.

வெளிநாடுவாழ் இந்தியர்களை முன்னிலை படுத்தும் வகையில் 18-வது பிரவாசி பாரதிய தின மாநாட்டையும் பிரதமர் ஒடிஷா தலைநகர் புபனேஸ்வரில் தொடங்கி வைக்கிறார்.

❖❖❖❖❖❖❖

<u>முதலமைச்சர் கடிதம்</u>

தேசிய தேர்வு முகமை நடத்தவுள்ள **UGC Net** தேர்வுகள், வரும் 14-ம் தேதி பொங்கல் தினத்திற்கு பதிலாக வேறொரு நாளுக்கு மாற்றியமைக்க முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கோரியுள்ளார்.

மத்திய கல்வியமைச்சர் திரு. தர்மேந்திர பிரதானுக்கு, முதலமைச்சர் எழுதியுள்ள கடிதத்தில், தமிழ்நாட்டில் அனைத்து தரப்பினராலும் அறுவடை திருவிழாவாக பொங்கல் விழா கொண்டாடப்படுவதை சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழகம் மற்றும் பல மாநிலங்களிலும் அறுவடை திருநாள் கொண்டாடப்படுவதால் இம்மாதம் 13 முதல் 16 வரையிலான நாட்களை தவிர்த்து பொருத்தமான வேறு நாட்களில் இத்தேர்வை நடத்த முதலமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

❖❖❖❖❖❖❖

<u>மன்மோகன் சிங்</u>

தமிழ்நாட்டிற்கு பல்வேறு திட்டங்களை கொண்டு வந்தவர் முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் என்று, முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

சென்னை காமராஜர் அரங்கில் டாக்டர் மன்மோகன் சிங், ஈ.வி.கே.எஸ். இளங்கோவன், நினைவேந்தல் நிகழ்ச்சியில் இன்று உரையாற்றிய அவர், உலக பொருளாதார மேதைகளில் ஒருவராக மதிக்கப்பட்டவர் டாக்டர் மன்மோகன் சிங் என்று புகழாரம் சூட்டினார்.

அவர் உருவாக்கிய பொருளாதார திட்டங்கள் நம்நாட்டின் வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைந்ததாகவும் முதலமைச்சர் குறிப்பிட்டார்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் முன்னாள் தலைவர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன், அனைத்து பதவிகளிலும் முத்திரை பதித்தவர் என்றும் முதலமைச்சர் பாராட்டினார்.

❖❖❖❖❖❖❖

<u>சட்டப்பேரவை</u>

தமிழக சட்டப்பேரவையில் முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் மற்றும் சட்டமன்ற உறுப்பினரும், முன்னாள் மத்திய அமைச்சருமான ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் ஆகியோரின் மறைவிற்கு இரங்கல் தீர்மானங்கள் இன்று நிறைவேற்றப்பட்டன.

முன்னதாக பேரவை தலைவர் திரு. அப்பாவு இதற்கான தீர்மானத்தை முன்மொழிந்தார்.

மறைந்த தலைவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று 2 நிமிடம் மவுனஅஞ்சலி செலுத்தினர்.

சட்டப்பேரவை முன்னாள் உறுப்பினர் தமிழ்மொழி ராஜதத்தன் மறைவிற்கான இரங்கல் குறிப்பையும் பேரவை தலைவர் இன்று அவையில் வாசித்தார்.

இதனைத் தொடர்ந்து அவை ஒத்திவைக்கப்பட்டு நாளை கூடும் என அவைத்தலைவர் திரு. அப்பாவு அறிவித்தார்.

❖❖❖❖❖❖❖

**HMPV - சுப்ரமணியன்**

தமிழகத்தில் **HMPV** நோய்த்தொற்று குறித்து மக்கள் அச்சப்பட தேவையில்லை என்று மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இருமல், தும்மல், காய்ச்சல் அறிகுறி தென்பட்டால் மருத்துவமனைக்கு சென்று பரிசோதனை செய்துகொள்ளுமாறு அறிவுறுத்தினார்.

இவ்வைரஸ் குறித்த எந்த அறிவிப்பையும் உலக சுகாதார நிறுவனம் வெளியிடவில்லை என்று கூறிய அமைச்சர், இந்நோயை கட்டுப்படுத்தும் நிலையிலேயே தமிழகம் இருப்பதாக கூறினார்.

மக்கள் கூட்டம் அதிகம் உள்ள இடங்களில் முகக்கவசம் அணிதல் உள்ளிட்ட நெறிமுறைகளை பின்பற்ற வேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

**HMPV**

நோய்த்தொற்று பரவல் குறித்து மாநிலங்கள் விழிப்புணர்வை மக்களிடையே அதிகரித்து உரிய நெறிமுறைகளை பின்பற்ற மத்திய சுகாதார செயலர் திருமதி. புன்ய சலீலா ஸ்ரீவத்சவா வலியுறுத்தியுள்ளார்.

நுரையீரல் தொற்று பாதிப்பு தொடர்பாக மாநிலங்கள் பங்கேற்ற ஆய்வுக்கூட்டத்தில் உரையாற்றியஅவர், கண்காணிப்புகளை முடுக்கிவிடுமாறு அறிவுறுத்தினார்

குளிர்காலங்களில் சுவாச நோய் பொதுவாக இருக்கும் என்றும், நோய்த்தொற்று பரவலை சமாளிக்கும் திறனை நம்நாடு பெற்றிருப்பதாகவும் எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖

தமிழிசை

தமிழ்நாட்டில் பெண்களுக்கு எதிரான குற்றங்களை மறைப்பதற்காகவே தி.மு.க. இன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதாக பி.ஜே.பி-யின் டாக்டர் தமிழிசை சவுந்தர்ராஜன் தெரிவித்துள்ளார்.

கோவை விமான நிலையத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், தமிழ்நாட்டில் எதிர்கட்சிகளின் குரல்கள் ஒடுக்கப்படுவதாக குற்றம் சாட்டினார்.

மாநிலத்தில் கருத்து சுதந்திரம் இல்லை என்று கூறியஅவர், திமுக கூட்டணியில் இடம்பெற்றிருப்பவர்களே அவர்களுக்கு எதிராக பேசுவதாகவும் குறிப்பிட்டார்.

தமிழக மக்களுக்கான பொங்கல் பரிசு தொகை வழங்கப்படாதது குறித்தும் கேள்வி எழுப்பிய அவர், வரும் 2026-ஆம் ஆண்டு சட்டப்பேரவை தேர்தலில் திமுக பெரிய பின்னடைவை சந்திக்கும் என்றார்

❖❖❖❖❖❖❖

இருவரி

தேசிய சாலை பாதுகாப்பு வாகன விழிப்புணர்வு பேரணி ராணிப்பேட்டை, திருப்பூர் மாவட்டங்களில் இன்று நடைபெற்றது.

விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளுடன் ஏராளமான பொதுமக்கள் இதில் பங்கேற்றனர்.

பெரம்பலூர் மாவட்டத்தில் திருநங்கைகளுக்கான முன்மாதிரி விருதுபெற அடுத்த மாதம் 10-ம் தேதிக்குள் இணையதளம் மூலம் விண்ணப்பிக்கலாம் ஆட்சித் தலைவர் திருமதி. கிரேஸ் பச்சாவ் தெரிவித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டத்தில் சிறிய அளவில் ஜவுளிபூங்கா அமைக்க 50 சதவிகித மானியத்துடன் அரசு வழங்க இருப்பதால் இந்த வாய்ப்பை தொழில் முனைவோர் பயன்படுத்திக்கொள்ளுமாறு ஆட்சித் தலைவர் திருமதி. ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.

மதுரை அவனியாபுரம் ஜல்லிக்கட்டு முன்னேற்பாட்டு பணிகளை மாநில அமைச்சர் திரு. மூர்த்தி இன்று ஆய்வுசெய்தார்.

கன்னியாகுமரியில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு வரும் 15, 16, 17 தேதிகளில் சுற்றுலா படகுகள் இயக்கம் தினசரி 5 மணிநேரம் நீட்டிக்கப்பட உள்ளதாக பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழகம் அறிவித்துள்ளது.

❖❖❖❖❖❖❖

நாமக்கல் - வாய்ஸ்

நாமக்கல் மாவட்டம் கொல்லிமலையில் மர்மவிலங்கு நடமாட்டம் இல்லை என்றும், வளர்ப்பு நாய்கள் என்றும் மாவட்ட வனத்துறை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து எமது செய்தியாளர்.

.. கண்ணன் வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

உதகை வாய்ஸ்

உதகை மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் உறைபனி பொழிவால் கடும் குளிர் நிலவி வருகிறது

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

நாகை – வாய்ஸ்

நாகை மாவட்டத்தில் இன்று பட்டத்தின் நூலில் சிக்கிய ஆஸ்திரேலிய ஆந்தை, மற்றும் கம்பியில் சிக்கிக் கொண்ட மயில் ஆகியவற்றை தீயணைப்பு படையினர் மீட்டனர்.

இதுகுறித்து எமது செய்தியாளர்.

... செல்வன் ஜெபராஜ் வாய்ஸ் ...

❖❖❖❖❖❖❖

டென்னிஸ்

கோலாலம்பூரில் நடைபெறும் மலேஷிய ஓப்பன் பேட்மிட்டன் சாம்பியன்பட்ட மகளிர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு இந்தியாவின் ட்ரீஷாஜாலி, காயத்ரி கோபிசந்த் இணை முன்னேறியுள்ளது.

இந்த இணை தாய்லாந்தின் **Ornnicha**, **Sukitta** இணையை 21-10, 21-10 என்ற நேர்செட்களில் வென்றது.

❖❖❖❖❖❖❖